திருந்தார். அத்துடன் நாடு போற்றும் கவிதை எழுதுவதிலும் சிறந்த கவி ஞராகவும் அவர் அடையாளங் காணப்பட்டார். ஜனரஞ்சகமான பாடல் களை எழுதி பாடுவதிலும் வல்லவராக அவர் திகழ்ந்தார். திரைத்துறை யிலும் சிறந்து விளங்கியவர்.

### குச்சவெளியில் 400 குடும்பங்களை வெளியேற பசில் உத்தரவு

குச்சவெளியில் வதியும் 400 குடும்பங்களை உடனடியாக வெளியேறு மாறு சிறீலங்கா அரசாங்கம் பணித்துள்ளது. திருகோணமலை குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் தற்காலிகமாகக் கொட் டில்கள் அமைத்து வசித்து வரும் சுமார் 400க்கு மேற்பட்ட குடும்பங்க ளையே அப்பிரதேசத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகிறது. மேற்படி குடும்பங்களுக்கு காணிகளோ அல்லது தற் காலிக வீட்டு வசதிகளோ இன்னமும் வழங்கப்படாத நிலையில், பசில் ராஜபக்ச அந்த குடும்பங்களை வெளியேறுமாறு பணித்துள்ளார்.

### அடுத்த கட்ட போராட்டமும் ஆயுத போராட்டம்

75 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட ஈழம் இன்று 15 கிலோ மீற்றராக சுருங்கிவிட்டது. ஈழமண் பறிபோனது. தமிழ் ஈழத்தில் மண்ணை இழந்து விட்டோம். அந்த மண்ணை இழந்தாலும் விடமாட்டோம். ஆயுதப்போர் தொடங்கும், இது வரை ஈழம் மூன்று கட்ட போர்களை சந்தித்திருக்கிறது. முதற்கட்ட போர் பேச்சுவார்த்தை, இரண்டாம் கட்ட போர் அறப்போராட் டம், மூன்றாம் கட்ட போர் பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம். நான்காவது போரும் ஆயுதப் போராட்டமாக அமையலாம். ஆயுதப் போராட்டம்தான் எங்கள் தீர்வு. போர்க்குணம் கொண்டவர்கள் இருக் கிறார்கள். போராட்டம் தொடரும்' என்று காசி ஆனந்தன் தெரிவித்தார்.

தமிழர் மீட்சிப்படையில் இருந்த முத்துக்குமாருக்கும், புதுக்கோட்டை திராவிட கழகத்தின் முன்னாள் மாவட்ட தலைவர் கரு.காளிமுத்து மகள் மாதரசிக்கும் இன்று திருமணம் நடைபெற்றது. புதுக்கோட்டை ஜெயின் பேலஸில் தமிழ் முறைப்படி நடந்த இத்திருமணத்திற்கு கொளத்தூர்மணி, சீமான், நெடுஞ்செழியன், காசி ஆனந்தன் போன்றோர் முன்னிலை வகுத் தனர். இத்திருமண விழாவில் பேசியபோதே காசி ஆனந்தன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

### கனடா உதயன் மக்களால் தாக்கப்பட்டது

சிறீலங்காவின் ஜனாதிபதி மகிந்த ராசபக்சவுடன் வர்த்தக உறவு கலந் துரையாடலில் பங்குபற்றியதற்காகவும் அச் செய்தியினை முன்பக்கத்தில் பிரசுரித்தமைக்காகவும் கனடா ஸ்காபரோவில் அமைந்துள்ள உதயன் பத்திரிகை தாக்கப்பட்டுள்ளது. கனடா உதயன் பத்திரிகை நிர்வாகி குலா செல்லத்துரை கனடா - சிறீலங்கா வர்த்தக சம்மேளனத்தின் தலைவராக இருகின்றார். இவர் அண்மையில் சிறீலங்கா சென்று மகிந்த ராசபக்சவு டன் கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன் மகிந்தவுடன் சேர்ந்து படம் எடுத்து அதனை உதயன் பத்திரிகையில் முன் பக்கத்தில் பிரசுரித்தார். தமிழினப் படுகொலை புரிந்த மகிந்தவுடன் கூட்டுவைத்த உதயன் மீது ஆத்திரம் அடைந்த மக்கள், செல்லத்துரை பத்திரிகை அலுவலகம் செல் லும் வேளை பார்த்து அங்கு எதிர்ப்பு தெரிவித்து காரியாலயத்தையும் தாக்கியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

### வெற்றிலைக்கேணி முகாமில் சிப்பாய் தற்கொலை

யாழ். வெற்றிலைக்கேணி சிறீலங்கா இராணுவ முகாமில் இராணுவ சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட் டுள்ளது. உயிரிழந்தவர் 25 வயதான சதகல என்ற சிப்பாயாவார். இவரது உடலில் ஐந்து குண்டுகள் பாய்ந்துள்ளதாக கூறப்படுகின்றது. ஐந்து குண் டுகள் பாயும் அளவிற்கு இவர் எவ்வாறு தற்கொலை செய்துகொண்டார் என்பது தெரியவரவில்லை.

### சிறீலங்காவிற்கு இந்திய வலி நிவாரணி

இந்தியாவிலிருந்து வலி நிவாரணி மற்றும் உயிர்காக்கும் மருந்து பொருள்களை 10 நாட்களுக்குள் இறக்குமதி செய்ய சிறீலங்கா அரசு முடிவு செய்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் உயிர்காக்கும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த வார தொடக்கத்தில் சுகாதார அதி காரிகள் அளவில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இத்தகவல் தெரியவந்தது. இதையடுத்து இந்தியாவில் இருந்து உயிர்காக்கும் மருந்து பொருள்களை இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி சுகாதாரத்துறை அமைச்சரவையின் ஒப்புதல்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மருந்துகள் அனைத்தும் சரக்கு விமான சேவை மூலம் பத்து நாட்களுக்குள் கொழும்பு கொண்டு வரும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என்றார் கொழும்பில் சுகாதாரம் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் நிகல் ஜெயதிலக. விடுதலைப் புலிகளுடன் போர் நடைபெற்ற போது, அதிகளவிலான வலி நிவாரணி மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு உதவும் மருந்து பொருட்களை வழங்குமாறு இந்தியாவிடம், சிறீலங்கா அரசு கேட்டுக்கொண்டது. அதற்கு சம்மதமும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார்.

### யாழில் உயர்தர வகுப்பு மாணவி காணாமல் போனார்.

யாழ்ப்பாணத்தில் 18 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கொக்குவில் இந்து கல்லூரியில் கல்வி பயின்ற மாணவியே காணாமல் போயுள்ளார். அவர் கடந்த செவ்வாய்க்கிழமை (16) முதல் காணவில்லை என தெரிவிக் கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மேலதிக வகுப்புக்காக சென்றதன் பின்னர், அவர் வீடு திரும்பவில்லை என அவரது பெற்றோர் முறையிட் டுள்ளனர்.

# இந்தியாவின் கவலைக்கு 'இந்து' மூலம் மருந்து தடவிய மகிந்த!

சீனாவுடன் சிறீலங்கா நெருங்கி உறவாடுவது இந்தியாவிற்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி வருவது யாவரும் அறிந்த உண்மை. இந்த உண்மையை சிறீலங்காவின் ஜனாதிபதியே அண்மையில் ஒத்துக் கொண்டிருக்கின்றார். இந்தியாவின் செய்தி இதழ்களில்



ஒன்றானதும் சிறீலங்காவுடன் விருது பெறும் அளவிற்கு நெருங்கிய நட்புறவைப் கொண்டுள்ளதும், எப்போதும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை திரித்து வெளியிட்டுவருவதுமான இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியில் சிறீலங்கா ஜனாதிபதி இந்த உண் மையை ஒத்துக் கொண்டிருக்கின்றார்.

சீனாவுடனான எனது தொடர்புகள் குறித்து அவர் கள் (இந்தியர்கள்) சற்று கவலையடைந்துள்ளனர். சீனா ஜப்பான் உட்பட பல நாடுகள் இங்கு முதலீடு செய்கின்றன. ஆனால் இந்தியா எனது உறவு நாடு. ஏனைய நாடுகளை, எனது நண்பர்கள் என்றே நான் எப்போதும் கூறுகிறேன் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளை அழித்த உரிமை யாருக்கு என்ற கேள்விக்கு பதிலளித்தபோது, சரத் பொன்சேகாவை ஒரு கூலித் தொழிலாளிக்கு ஒப்பட்டு தன்னை தாஜ்மகாலைக் கட்டிய சார்ஜகானாக வர்ணித் துள்ளார். அதற்கு அளித்த பதில் இவ்வாறுதான் அமைந்திருந்தது. தாஜ்மகாலைக் கட்டியவர் யார்? மக்கள் நினைவு கூர்வது தாஜ்மஹாலை நிர்மாணித் தவரையா? அதனைக்கட்டிய மேசனையா? அல்லது பிரதம பொறியியலாளரையா?? என்று கேள்வி எழுப் பினார்.

இதேவேளை, வன்னி மக்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், முகாமிலுள்ள மக்கள் வெளியேபோக விரும்பவில்லை என்று பொய்யான பரப்புரையை மேற்கொண்டார். முகாம்களில் 50,000 ற்கும் குறைவானவர்களே உள்ளனர் என்றும் அவர் களில் பலர் வெளியேபோக விரும்பவில்லை என்றும் கூறிய மகிந்த, மேற்கு நாடுகள் இதனை புரிந்து கொள்ள வில்லை. இங்கு என்ன நடக்கிறது என்பதே அவர்க ளுக்குத் தெரியாது. அவர்கள் அறிக்கை விடுகிறார்கள். மனிதாபிமான உதவிகள் பற்றிக் கேட்கிறார்கள். மனிதாபிமான உதவி தேவையில்லை என நான் கூறுகிறேன். எமது மக்களுக்கு உணவு வழங்கி அவர் களை நாங்கள் பராமரித்துக் கொள்கிறோம். இந்தியா விலிருந்து எந்த நேரத்திலும் உணவை பெற்றுக் கொள்ளலாம். அபிவிருத்தி உதவியே எங்களுக்குத் தேவையெனக் கூறினேன்.

மேற்கு நாடுகள் என்னை விரும்புவதில்லை. எனது சுயாதீனக் கருத்துக்களையும் அவர்கள் விரும்புவ தில்லை. எனது நாடே எனக்கு முக்கியம். மற்றொரு நாட்டுக்கு நான் ஏன் விசுவாசமாக இருக்க வேண்டும். நான் பச்சை அட்டை (அமெரிக்க கிறீன்கார்ட்) வைத் திருப்பவரல்ல என்று கூறியுள்ளார்.

# மரணத்தை உறுதிப்படுத்துவதில் வலு அவசரம்

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபா கரனின் உயிரிழப்பை உறுதிப்படுத்த மேலதிக ஆவ ணங்கள் தேவை என இந்தியா, சிறீலங்காவிடம் கோரி க்கை விடுத்துள்ளதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. ராஜீவ் காந்தி படுகொலை வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்காக இந்த ஆவணங்கள் தேவைப்படுவதாக மத்திய புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். மரபணு பரிசோதனையின் மூலம் பிரபாகரனின் உயிரிழப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், பிரபாகரனின் உயிரிழப்பு தொடர்பிலான இலங்கையின் ஆவணங்கள் இந்திய நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப் போதுமானதாக அமையவில்லை எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதேவேளை, பிரபாகரனின் மரணத்தை உறுதிப் படுத்திய ஆவணத்தினை சிறீலங்கா வழங்கியுள்ளதாக சி.பி.ஐ. தமக்குத் தெரிவித்ததாக இந்திய உட்துறை அமைச்சர் இம்மாதம் தெரிவித்திருந்தார். எனினும் அவ் ஆவணங்கள் பிரபாகரனின் மரணத்தை உறுதிப் படுத்துவதற்கு போதுமானதாக இல்லாமையால் சி.பி.ஐ. இன் பல்தரப்பு ஒழுக்காற்று கண்காணிப்பு முகவர் மேலும் சில ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு இம்மாதம் இரண்டாவது வாரத்தில் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொன்சேகாவிடம் கைப்பற்றப்பட்ட பணம் இன்ரர்போலிடம் சிறீலங்கா உதவி கோரியுள்ளது

சிறீலங்கா முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு 75 மில்லியன் ரூபா எவ்வாறு கிடைத் தது என்பது தொடர்பான தகவல்களை பெற்றுத்தரு மாறு, சிறீலங்கா காவல்துறையினர் பிரான்சில் உள்ள சர்வதேச காவல்துறை அமைப்பான இன்ரர்போலிடம் கோரியுள்ளனர். சரத் பொன்சேகாவின் மருமகனது தாயாரின் வங்கி வைப்பகத்தில் இருந்து 75 மில்லியன் ரூபாய்கள் மீட்கப்பட்டமையை தொடர்ந்து இந்த பணம் எவ்வாறு சரத் பொன்சேகாவுக்கு கிடைத்தது என்பது தமக்கு தெரியாது என எதிர்க்கட்சி தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பணம் சனாதிபதி தேர்தல் பிரசாரங்களுக் காக சரத் பொன்சேகாவின் வெளிநாட்டு நண்பர்களால் அனுப்பப்பட்டதாக அண்மையில் கைதுசெய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட சரத்பொன்சேகா வின் மருமகன் தனுனவின் தாயாரான அசோகா தில கரட்ன காவல்துறையினரிடம் தெரிவித்தார். தேர்தலுக் காக செலவழிக்கப்பட்ட பணத்தின் மீதித்தொகையே இது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சனாதிபதி தேர்தலின் போது சரத் பொன்சேகாவுக்கு இவ்வளவு தொகைப்பணம் எவ்வாறு கிடைத்தது என் பது தமக்கு தெரியாது என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும், சிறீ லங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுத்தலைவர் மங்கள சமரவீரவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையர் ஒருவர் மத்திய வங்கிக்கு தெரியாமல் 2000 அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான பணத்தை வைத்திருக்க முடியாது என்ற அடிப்படையிலேயே இந்த விசாரணைக்கான உதவி இன்ரர்போலிடம் கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர் தலில் செலவிடப்பட்டு எஞ்சிய தொகையே இவ்வளவு என்றால், செலவிடப்பட்ட தொகை எவ்வளவாக இருக் கும்..?!